**செய்தி வெளியீடு எண்:79** **நாள்: 30.01.2013**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (30.1.2013) தலைமைச் செயலகத்தில், திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம், காட்டுப்பள்ளி கிராமத்தில், எல் & டி மற்றும் டிட்கோ நிறுவனத்தின் கூட்டு முயற்சியில் 3 ஆயிரத்து 375 கோடி ரூபாய் முதலீட்டில் கட்டப்பட்டுள்ள எல் & டி கப்பல் கட்டுமானத் தளம் மற்றும் துறைமுகத்தினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம், காட்டுப்பள்ளி கிராமத்தில், எல் & டி மற்றும் டிட்கோ நிறுவனத்தின் கூட்டு முயற்சியில் 3 ஆயிரத்து 375 கோடி ரூபாய் முதலீட்டில் கட்டப்பட்டுள்ள எல் & டி கப்பல் கட்டுமானத் தளம் மற்றும் துறைமுகம் 1143 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதில் 810 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள கப்பல்கட்டும் தளமானது இந்தியாவிலேயே மிகப்பெரியதாகும். இதில் மிகப்பெரிய சரக்கு கப்பல்கள், பெட்ரோல் மற்றும் இயற்கை எரிவாயுவினை பெருமளவில் கொண்டு செல்லும் சிறப்பு வடிவினைக்கொண்ட கப்பல்கள், கடலிலிருந்து கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு எடுப்பதற்கான ஆய்வு கட்டுமானங்கள் வடிவமைத்தல் மற்றும் கப்பல் கட்டுவதற்கான கனரக இயந்திரங்கள் வடிவமைத்தல் (Fabrication) ஆகிய வசதிகள் உள்ளன. சுமார் 1.9 கிலோ மீட்டர் நீளமுள்ள கடல்பகுதி இந்நிறுவன துறைமுகத்தின் முகப்புப் பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த எல் & டி கப்பல் கட்டுமானத் தளம் மற்றும் துறைமுகத்தினை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

தமிழக அரசின் 2011–12ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையின் தற்போதைய உற்பத்தித் திறன் ஆண்டு ஒன்றிற்கு 5 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 15 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்காக விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்வதற்கான தொழில்நுட்ப ஆலோசகராக தேர்வு செய்யப்பட்டுள்ள திருவாளர்கள் டெவெலப்மெண்ட் கன்சல்டென்ட் பிரைவெட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு நியமன ஆணையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையில் பணிபுரிந்து பணியிலிருக்கும்போது காலமான 8 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலும், 7 நபர்களுக்கு நிலம் கையகப்படுத்திய வகையிலும் பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். மேலும், ஆலங்குளம் மற்றும் அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைகளின் பணியாளர் நலன்கருதி அவர்களுக்கு 25 லட்சம் ரூபாய் செலவில் தலா ஒரு ஆம்புலன்ஸ் வாகனம் மற்றும் ஒரு ஜீப் ஆகியவற்றை வழங்கினார்கள்.

புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் 4 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கினார்கள்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 2011–12ஆம் ஆண்டு 21 கோடியே 88 லட்சம் ரூபாய்க்கு உப்பு விற்பனை செய்து மொத்த லாபமாக 4 கோடியே 36 லட்சம் ரூபாய் ஈட்டியுள்ளது. இதன் அடிப்படையில் 25 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய் லாப ஈவுத்தொகையாகவும், கூடுதல் உரிமைத் தொகையான 1 கோடியே 47 லட்சம் ரூபாய், என மொத்தம் 1 கோடியே 72 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டம், கச்சிராயப்பாளையத்தில் அமைந்துள்ள கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை தொழிற்சாலை, 2010–11ஆம் ஆண்டு 6 கோடியே 36 லட்சம் ரூபாய் லாபம் ஈட்டியுள்ளது. இதில் தமிழக அரசின் மூலதனத்திற்கான ஈவுத்தொகை 1 கோடியே 86 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், தொழில்துறை முதன்மைச் செயலாளர், டிட்கோ நிறுவன முதன்மைச் செயலாளர்/தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், எல் & டி நிறுவனத்தின் முதுநிலை செயல் துணைத் தலைவர் திரு. எஸ்.என். சுப்ரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

நாள் : 30.1.2013